தமிழ்நாட்டிற்கு நிதி தராமல் வஞ்சிக்கும் ஒன்றிய அரசுக்கு

சட்டமன்றத் தேர்தலில் தகுந்த பாடம் புகட்ட வேண்டும்!

ஒட்டன்சத்திரம் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் – அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!

திண்டுக்கல், பிப். 26 -

ஒட்டன்சத்திர நகர கழகத்தின் சார்பில் பொது உறுப்பினரகள் கூட்டம் நடைபெற்றது. நகரச் செயலாளர் வெள்ளைச்சாமி தலைமை வகித்தார். உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சரும் மேற்கு மாவட்டச் செயலாளருமான அர.சக்கரபாணி கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறுதிகளையும், சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றி வருகிறார்.

ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் 932 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே முதல்முறையாக மகளிருக்கு இலவச பயண திட்டத்தை "கொண்டு வந்தவர் நமது முதலமைச்சர். 3 மாதத்தில் விடுபட்டுள்ள தகுதியுள்ள மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமை தொகை வழங்கப்பட உள் ளது. நகர்ப்புறத்தில் வசிக்கும் அனைவருக்கும் விரைவில் பட்டா வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டு ள்ளார்.

தமிழகத்திற்கு நிதி தராமல் வஞ்சிக்கும் ஒன்றிய அரசுக்கு 2026 சட்டமன்ற மன்ற தேர்தலில் தகுந்த பாடம் புகட்ட வேண்டும்.

ஒட்டன் சத்திரம் சட்டமன்ற தொகுதியில் 30 ஆண்டுகளுக்கு குடிநீர் பிரச்சினையை தீர்க்கும் வகையில் ரூ. 1000 கோடி யில் காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட் டுள்ளது. ஒட்டன்சத்திரத்தில் சாலை, கழிவுநீர் கால்வாய் வசதி அமைக்கப்பட உள்ளது.

அரசப்பிள்ளை பட்டி, கொல்லப்பட்டி காளஞ்சி பட்டி உள்ளிட்ட பகுதிகளில் சர்வீஸ் ரோடு அமைக்க நிதி பெறப்பட் டுள்ளது. தமிழக அரசின் சாதனைகளை கட்சி நிர்வாகிகள் பொதுமக்களிடம் எடுத்து சொல்ல வேண்டும்.

வரும் மார்ச் 1ம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவில் பள்ளி மாணவர்கள், ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது, 2026 சட்டமன்ற தேர்தலில் ஒட்டன்சத்திரம் நகரத்தில் அதிகவாக்குகள் பெற்று தருதல், மும்மொழிக் கொள்கையை திணிக்கும் ஒன்றிய அரசை கண்டித் தல், இந்தி எதிர்ப்பு துண்டுப் பிரசுரம் வழங்குவது. தமிழக அரசின் சாதனைகளை திண்ணை பிரசாரம் மற்றும் துண்டு பிரசுரங்கள் வாயிலாக மக்களிடம் எடுத்து செல்லுதல் வேண்டும் .

இவ்வாறு அமைச்சர் சக்கரபரணி பேசினார்.

இக் கூட்டத்தில் வரும் மார்ச் 1ம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவில் பள்ளி மாணவர்கள், ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது, 2026 சட்டமன்ற தேர்தலில் ஒட்டன்சத்திரம் நகரத்தில் அதிகவாக்குகள் பெற்று தருதல், மும்மொழி கொள்கையை திணிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித் தல், இந்தி எதிர்ப்பு துண்டுப் பிரசுரம் வழங்குவது. தமிழக அரசின் சாதனைகளை திண்ணை பிரசாரம் மற்றும் துண்டு பிரசுரங்கள் வாயிலாக மக்களிடம் எடுத்து செல்லுதல் வேண்டும் , ஒட்டன்சத்திரத்தில் 480 அடுக்குமாடி குடியிருப் புகள் கட்டி கொடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் , ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் வழங்கல்துறை துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோருக்கு நன்றி தெரிவித்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

இதில் தொகுதி பொறுப்பாளர் பரணி மணி. மாவட்ட அவை தலைவர் மோகன், நகர அவை தலைவர் சோமசுந்தரம், நகர பொருளாளர் அப்பாசாமி, நகர்மன்ற தலைவர் திருமலைசாமி, செயற்குழு உறுப்பினர் கண்ணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாண்டியராஜன், அரசு ஒப்பந்ததாரர் வேலுசாமி, நகர துணை செயலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, ஆறுமுகம், கிரிஜா, நகர தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் இளமதி, மற்றும் வார்டு செயலாளர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் இளைஞரணி மாணவரணி, தகவல் தொழில் நுட்ப அணி, மகளிர் அணி நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்.

டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - தா.மோ.அன்பரசன் பங்கேற்பு! காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமை!

மதுரவாயல் தெற்குப் பகுதியில் முதல்வர் பிறந்த நாள் விழா கவியரங்கம்!

கவிப்பேரரசு வைரமுத்து தொடக்கவுரை ! கவிமாமணி அப்துல் காதர்- கவிஞர்கள் கவிபாடுகிறார்கள்!

சென்னை, பிப். 26 -

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி தி.மு.க. சார்பில் நாடும் ஏடும் போற்றும் எழுச்சிமிகு கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு "சுட்டு விரலில் வெற்றி படைக்கும் சூரியன்" என்கிற தலைப்பில் கவியரங்கம் வருகின்ற 27.02.2025 வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில் வானகரம் ஸ்ரீவாரு வெங்கடாசலபதி பேலஸில் மதுரவாயல் தெற்குப் பகுதி கழக செயலாளரும், மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி தலைமையிலும், மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர்கள் எஸ். அருணாசலம், இராமாபுரம் வ.செல்வகுமார், பகுதி நிர்வாகிகள் செல்வராஜ், எஸ். பாரதி, கே.ராஜி, ஆகியோர் வரவேற்கின்றனர்.

கவியரங்கம் தொடக்க உரை கவிப்பேரரசு வைரமுத்து, முன்னிலை; காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் , தலைமை; கவிமாமணி அப்துல் காதர் , கவி பாடுபவர்கள்: கவிஞர் பொன். செல்வகணபதி, கவிஞர் நெல்லை ஜெயந்தா, கவிஞர் சொற்கோ இரா.கருணாநிதி, கவிஞர் இளையகம்பன், கவிஞர் ஜெயச்சந்திரன் ஆகியோர் கவிபாடுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக பொருளாளர், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் எஸ்.அரவிந்த் ரமேஷ், எ.எம்.வி..பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், வர்த்தகர் அணி காசிமுத்துமாணிக்கம், பி.டி.பாண்டிசெல்வம், எஸ்.பத்மபிரியா, பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி. மாவட்ட நிர்வாகிகள் எஸ். குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், மு.மனோகரன், பா.வாசுகிபாண்டியன், எஸ்.பாஸ்கரன், பகுதி - ஒன்றிய கழக செயலாளர்கள்: கே.கண்ணன், மு.ராஜா, எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், எஸ்.வி.ரவிச்சந்திரன், மதியழகன், துரைகபிலன், அரிமா சு.சேகர், ஜி.வெங்கடேசன்

பொதுக்குழு உறுப்பினர்கள்: வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், வீர. கனிமொழி, சைதை சம்பத், சைதை மா. அன்பரசன், எம்.கே.ஏழுமலை, ப.ரவி, உ.துரைராஜ், மின்னல் கந்தப்பன், எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், எஸ்.டி.தங்கராஜன், ரா. பாலசுந்தரம், பி.எஸ்.முருகேசன், எஸ்.டி.தங்கராஜ், தா.பஷீர், டி.ஜே.பாஸ்கர்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வி. ராஜேஷ், அ.விஜயபாலா, அருள், கே.குமரேசன், வே. ஆனந்தன், ஏ.கே.ஆனந்த், எஸ்.தீபக், ம.பார்த்திபன், எம்.விநாயகமூர்த்தி, சைதை சாதிக், கழக த.ரமேஷ், தரமணி ஜெகதீசன், பா. அருண்குமார், டி.கனிமொழி, சி.பரிமேலழகன், சி. சுரேஷ், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், ஜி.வரதன், மருத்துவர் அனிஸ், எம்.எஸ்.ஹரிபாபு, கோ. பாஸ்கர், சசிகுமார், . முகேஷ், நிஷாசையத், எஸ். பாலமுருகன், மு.மா. வழ.அ.து. அமைப்பாளர், முகப்பேர் கே.நீலகண்டன், ச.சங்கர்கணேஷ், மா.இ.அ.து.அமைப்பாளர், செ. ரவி, மா.இ.அ.து.அமைப்பாளர் மதுரவாயல் தெற்கு, வடக்கு பகுதி - வில்லிவாக்கம் ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள்: ஆர்.கர்ணல், தீ.பாலாஜி, செந்தில்சுரேஷ், ஆ.மாலினி, ம.உதயகுமார், என்.ஜெயச்சந்திரன், எ.எம்.யுவராஜா, ஆர்.கௌரிசங்கர், ப.கிரிஜா, என்.ரவி மதுரவாயல் தெற்கு - வடக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்:

எஸ்.ரமேஷ்ராஜ், த.ரமேஷ், சி.சுந்தர், அ. மோசஸ், தி.சார்லஸ், ஆ.செல்வம் எஸ்.ஜி.மாதவன், எம்.கே.பி.அண்ணாதாசன், எம்.எம்.ஜெயரத்தினம், சி.சசிகுமார், ப.ஆலன், எம். ரூபன், மாமன்ற உறுப்பினர்கள் ஹேமலதா கணபதி, செல்விரமேஷ், சாந்திஇராமலிங்கம், ஸ்டாலின், ரமணி மாதவன், மற்றும் தொகுதிக் குட்பட்ட மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள். வே.மதியழகன், இரா.பால் பாண்டியன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம்!

தி.மு.க. மாணவரணி சார்பில் மாவட்டத் தலைநகரங்களில் போராட்டம்!

சென்னை, பிப். 26 -

மும்மொழிக்கொள்கை என்ற பெயரில் தமிழ்நாட்டில் இந்தியைத் திணிக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து முயற்சித்து வருகிறது.

மேலும், இக்கொள்கையை ஏற்காவிட்டால் தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய கல்வி நிதியை வழங்க முடியாது என ஒன்றிய கல்வியமைச்சர் தர்மேந்திர பிரதான் ஆணவத்துடன் பேசியுள்ளார்.

இந்நிலையில், ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, தமிழ்நாடு முழு வதும் அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் தி.மு.க. மாணவரணி சார்பில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை, மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, ராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவாரூர், சேலம் உட்பட தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. மாணவரணி சார்பில் நடைபெற்ற இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டத்தில் பல்வேறு மாணவர் அமைப்புகளைச் சேர்ந்தவர்களும், தி.மு.க. வினரும் பல்லாயிரக்கணக்கில் கலந்து கொண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து முழக்கங்களை எழுப்பினர்..

தி.மு.க.மீனவர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

தி.மு.க. மீனவர் அணி செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, பிப். 26 -

கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.க மாநில நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம் நாளை (27.02.2025 - வியாழக் கிழமை) காலை 10 மணியளவில் திருவொற்றியூர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. இல்லத்தில் மாநில தலைவர் இராபெர்னார்டு, மாநில துணைத் தலைவர்கள் கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., இரா.மதிவாணன் ஆகியோர் முன்னிலையில் எனது (கழக மீனவர் அணிச் செயலாளர் அஜோசப் ஸ்டாலின்), தலைமையில் நடைபெற உள்ளதால் அனைத்து கழக மாநில மீனவர் அணி நிர்வாகி களும் கலந்து கொள்ளவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்

பொருள்: மீனவ மக்களின் நம்பிக்கை நாயகர், முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழா, அணியின் வளர்ச்சி பணிகள்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., பி.டி.பாண்டிசெல்வம், ரமணி மாதவன் எம்.சி. பங்கேற்பு!

மதுரவாயல் 147 வது வட்டக் கழக பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. முன்னிலை! மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் அறிக்கை!

சென்னை, பிப். 26

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்டத்திற்கு உட்பட்ட பாக முகவர்கள் கூட்டம் இன்று (26.02.2025 புதன்கிழமை) மாலை 5.00 மணிக்கு, ஆலப்பாக்கம், ப்ரீத்தி திருமண மஹாலில் நடைபெறுகிறது.

147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் (எனது) தலைமையிலும், வளசரவாக்கம், 11 வது மண்டலக் குழுத் தலைவர், மதுரவாயல் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், சென்னை பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, மதுரவாயல் தொகுதிப் பார்வையாளர் பி.டி.பாண்டிசெல்வம், 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர், கல்வி நிலைக்குழு உறுப்பினர் ரமணி மாதவன் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளதால் 147 வது வட்டத்திற்குட்பட்ட பாக முகவர்கள், மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன் எஸ். ஜி.மாதவன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தி.மு.க.வின் மொழி உணர்வு!

எஸ்.ரகுபதி
சட்ட அமைச்சர்

சுதந்திரம் பெற்ற இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தொடங்கப்பட்டது தான் திராவிட முன்னேற்ற கழகம். தொடங்கப்பட்ட நாள் முதல் இன மொழிக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது கழகம்.

இந்தி திணிப்பை அந்தக் காலம் முதலே தனது எதிர்ப்பை தொடர்ந்து பதிவு செய்து நாட்டையே ஸ்தம்பிக்கச் செய்தது திராவிட முன்னேற்றக் கழகம். 1965ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட இந்தி எதிர்ப்புப் போராட்டம் நாட்டையே ஸ்தம்பிக்க செய்தது.

1965 மார்ச் மாதம் மாநிலங்களவையில் அண்ணா இந்தி எதிர்ப்பு போராட்டம் பற்றி விளக்கினார். தமிழ்நாட்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தை தூண்டியது திமுக என்று கூறப்படுவதை நான் மறுக்கிறேன். தமிழ் நாட்டில் மாணவர்கள் உணர்வுபூர்வமாக கிளர்ந்து நடத்திய போராட்டம் அது. ஜனவரி 26ஆம் நாள் முதல் இந்தி ஆட்சி மொழியாக்கப்படும் என்பதால் ஜனவரி 25ஆம் தேதி கருப்பு தினம் என்று அனுசரித்தோம். அன்றைய மாநில முதல்வர் இந்தப் போராட்டம் பற்றி எந்தவித அறிக்கையும் தராமல் ஜனநாயக விரோத முறையில் நடந்து கொண்டார். தமிழக மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டபோதும் தமிழக மக்கள் வேட்டையாடப்பட்ட போதும் கேரளாவுக்கு வந்த பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி ஏன் சென்னை மாகாணத்துக்கு வரவில்லை என்று கோபத்துடன் பேசினார் அண்ணா.

நாடாளுமன்றத்தில் ஆட்சி மொழி சிக்கல் பற்றி பேசியது குறித்து அண்ணா அவர்கள் 21.03.1965 காஞ்சி இதழில் தம்பிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். நாம் சொல்லி வருவதெல்லாம் இந்தி இந்தியாவில் ஒரு பகுதியினரின் தாய்மொழி. அதனை இந்தியாவில் ஆட்சி மொழி என்று ஆக்குவது கூடாது.பெரும் தீது அது. இந்தி பேசாத மக்களை அநீதிக்கு ஆட்படுத்தும் இரண்டாம் தர குடிமக்களாக்கும். ஆகவே அதனை ஒப்பமாட்டோம் எதிர்க்கிறோம் என்பதாகும். அண்ணா மாநிலங்களவையில் பேசியதானதும் இந்தி தீவிர கட்சியான ஜனசங்கத்தைச் சேர்ந்த வாஜ்பாய் பேசினார். அவர் அண்ணாவையும் அண்ணா சொன்ன கருத்துக்களையும் பலமாக தாக்குவார் என்ற நப்பாசை பலருக்கு இருந்தது. ஆனால் அவரே அண்ணாதுரை சொல்லுகிற 14 தேசிய மொழிகளும் ஆட்சி மொழிகளாக வேண்டும் என்ற திட்டத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று தான் பேசினார்.

இன்றைய பாரதிய ஜனதாவின் அன்றைய ஜனசங்க கட்சி தலைவராக இருந்த வாஜ்பாய் அப்போதே திமுகவின் ஆட்சி மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார். இந்த வரலாறு எல்லாம் மோடியின் பாரதிய ஜனதா கட்சிக்கு தெரிய வாய்ப்பில்லை. .

அண்ணா ஊட்டிய அதே மொழி உணர்வை கலைஞர் கட்டிக் காத்தார் நமது தளபதி அதே வேகத்துடன் தமிழுக்காகவும் இந்தி திணிப்புக்காகவும் போராடி வருகிறார்.

அதனால்தான் 1967 தேர்தல் அறிக்கையிலேயே தமிழ் போன்று உள்ள 14 தேசிய மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் எனவும், அதுவரை தற்போது உள்ளபடி ஆங்கிலம் நீடிக்க வேண்டும் எனவும் அனைத்திந்திய அரசு தேர்வுகளிலும் இந்திக்கு மட்டும் இடம் அளிப்பது போன்று தமிழுக்கும் மற்ற மொழிகளுக்கும் அந்த வாய்ப்பு தரப்பட வேண்டும் எனவும் கழகம் குறிப்பிட்டிருந்தது. கழகம் இந்தி பேசாத மற்ற மாநில மக்களுக்காகவும் தனது குரலை தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது .

மொழி பற்றிய பிரச்சினை 1946இல் அரசியல் நிர்ணய சபையிலே எழுப்பப்பட்டது. உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த துலேகர் என்ற இந்தி வெறியர். அந்தக் கூட்டத்தில் பேசும் போது இந்தி பேசாதவர்கள் இந்தியர்கள் அல்ல. இந்தி பேசாதவர்கள் அரசியல் நிர்ணய சபையை விட்டு வெளியேற வேண்டும் என்று பேசினார்.

இதற்கு தென் இந்தியாவைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்தார்கள். அதில் முக்கியமானவர்கள் டி.டி.கிருஷ்ணமாச்சாரி, கோபால்சாமி ஐயங்கார், பேராசிரியர் என். ஜி .ரங்கா, டி.ஏ ராமலிங்க செட்டியார், மைசூர் பகுதியை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி ராவ் ஆகியோர்.

இதில் டி.டி கிருஷ்ணமாச்சாரி துலேக்கருக்குச் சொன்னபதில் சரியான பதிலடி. நாங்கள் வலுவான இந்தியாவை உருவாக்க விரும்புகிறோம். ஆனால் இந்தி நம்மை அடிமைப்படுத்தி விடும் என்று அச்சம் எனக்கு ஏற்படுகிறது. இந்தி ஏகாதிபத்தியம் வந்து விடுமோ என்ற பயம் எனக்கு ஏற்படுகிறது. உங்களுக்கு முழு இந்தியா வேண்டுமா அல்லது இந்தி இந்தியா வேண்டுமா இதை உத்தரப்பிரதேச உறுப்பினர்தான் முடிவு செய்ய வேண்டும் என்றார்.

இதேதான் இன்றும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தளபதி சொல்கிறார். இந்தி இந்தியா எங்களுக்கு வேண்டாம் என்பதுதான் கழகத்தின் முடிவு.

ராஜாஜியின் இந்தி எதிர்ப்பு கோஷம் ரொம்பவும் பிரபலம். Hindi never. ENGLISH EVER என்பதுதான் அந்த கோஷம். உலக மொழியான ஆங்கிலத்தை அவர் விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. உலகத்தில் எல்லோராலும் பேசப்படும் மொழி ஆங்கிலம் என்றார் ராஜாஜி. ஆங்கிலத்தை வைத்து இந்தியை உள்ளே நுழைய விடாமல் தடுக்க முடியும் என்று வற்புறுத்தினார் ராஜாஜி. இந்தி பேசுபவர்களுக்கு ஆங்கிலம் அந்நிய மொழி என்றால் இந்தி பேசாதவர்களுக்கும் இந்தி அந்நிய மொழி தான் என்றார் ராஜாஜி.

தமிழர்களின் மொழி உணர்வுக்கு இப்படி நிறைய ஆதாரங்களை நாம் சொல்லிக் கொண்டே போகலாம். மொழி உணர்வு என்ற நெருப்பை இன்று வரை அணைக்காமல் கட்டி காப்பது திராவிட முன்னேற்றக் கழகம் தான்.

மற்ற மொழியாளர்களின் உணர்வுகளை தி.மு.க. என்றும் மதிக்கிறது. 1972ஆம் ஆண்டு டிசம்பர் 15ஆம் தேதி நாடாளுமன்றத்தில் சில மொழிகளை எட்டாவது அட்டவணையில் சேர்ப்பது தொடர்பான மசோதா தாக்கல் செய்த போது அதை ஆதரித்து தான் திமுக உறுப்பினர்கள் பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை ஒரு குறிப்பிட்ட மொழிக்கு மட்டும் முக்கியத்துவம் தந்து மற்ற மொழிகளை பின்னுக்குதள்ளும் போக்கு மாற வேண்டும் என்பதுதான் . இதைத்தான் அன்றும் இன்றும் திராவிட முன்னேற்ற கழகம் சுட்டிக்காட்டுகிறது.

ஆட்சி மொழி சட்ட மசோதா விவாதத்தில் (டிசம்பர் 11, 1967 ஆம் ஆண்டு) பேராசிரியர் அன்பழகன் நாடாளுமன்றத்தில் பேசியதை இப்போது இருக்கும் பாரதிய ஜனதா நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற நூலகத்தில் சென்று எடுத்து படித்துக் கொள்வது நல்லது. அவர் அப்போதே அடுத்த தலைமுறை நாடாளுமன்றத்துக்கு வந்துவிட்டது அந்த நாட்கள் போல் இந்த நாட்கள் இல்லை காலம் மாறுகிறது அதற்கேற்ற படி நீங்கள் மாறிக் கொள்ளுங்கள் என்று என்று அறிவுரை வழங்கி இருக்கிறார் பேராசிரியர்.

இந்தி மட்டும் ஆட்சி மொழி என்பதை நாங்கள் ஏற்கவில்லை இதனால் நாங்கள் ஆங்கிலத்தை ஏற்கிறோம் என்பது பொருள் அல்ல.கட்டாயத்தின் காரணமாக நான் உங்களிடம் இப்போது ஆங்கிலத்தில் பேசுகிறேன். நமது உறுப்பினர் ஆச்சார்யாகிருபானி இந்தியில் பண்டித்தியம் பெற்றவர் ஆனால், அவர் இன்று பேசும் போது அவரது கருத்தை ஆங்கிலத்தில் தான் சொன்னார். காரணம் அவரது கருத்து இளைய தலைமுறைக்கு போய் சேர வேண்டும் என்ற எண்ணம்தான்.

சக உறுப்பினர் எஸ் .ஏ .டாங்கே இந்தியில் பேசத் தொடங்கினார். ஆனால், ஆங்கிலத்தில் தான் அவர் விவாதித்தார். இந்தி எல்லா இடங்களிலும் பரவ வேண்டும் என்று உங்கள் நோக்கத்தை நான் மதிக்கிறேன். ஆனால் இந்தியை கட்டாயப்படுத்தி எந்த வழியில் திணிக்க முயற்சி செய்தாலும் அதை நான் எதிர்ப்பேன். இந்தி மொழிக்கு தரப்படும் அதே மரியாதை முக்கியத்துவத்தை தமிழுக்கு தாருங்கள். பெங்காலி, மராத்தி இப்படி எல்லா மொழிகளுக்கும் தாருங்கள் என்பது தான் என் கோரிக்கை.

எல்லா மொழியும் சமம் எல்லா மொழியும் ஆட்சி மொழி அந்தஸ்து பெற வேண்டும். அப்போதுதான் பிற மாநிலங்களில் இந்தி மதிக்கப்படும். நாம் எல்லோரும் பாரத மாதாவின் பிள்ளைகள் நாம் எல்லோரும் ஒரே இரத்தம் என்பது உண்மையானால் இது நடக்க வேண்டும். இந்தியா என்பது ஒன்றியம் பல மாநிலங்கள் பல தரப்பட்ட மொழி பேசும் மாநிலங்கள் கொண்ட ஒன்றியம். ஒன்றிய அரசுக்கு அதிக அதிகாரம் என்றாலும் மாநில அரசுக்கு சில சுய உரிமை உண்டு. இந்தி மொழி பல மொழிகளை கடன் வாங்கிஇருக்கிறது. உருது ஆங்கிலம் சமஸ்கிருதம் ஏன் சில தமிழ் வார்த்தைகளை கூட நீங்கள் இந்தியில் உபயோகிக்கிறீர்கள்.

எனவே இந்தி வளர்ச்சி என்பது இயற்கையானது அல்ல. நீங்கள் இந்தியை திணித்து அரசாங்கத்தை இயல்பாக நடத்தலாம் என்று எண்ணாதீர்கள் ரொம்பவும் சிரமப்படுவீர்கள். உத்திரபிரதேசத்தில் இருப்போர் எல்லோரும் இந்தி பேசுவோர் அல்ல.பீகாரிலும் அதேதான். ராஜஸ்தானில் இந்தி மொழி இப்போது பரிசோதனை மொழியாக இருக்கிறது. சிங்கப்பூர், மலேசியா, சிலோன், தென் ஆப்பிரிக்கா, பர்மா மற்றும் இந்தோனேசியா இங்கெல்லாம் தமிழ் பேசுபவர்கள் அதிகம் அங்கெல்லாம் அவர்கள் தமிழுக்கு அங்கீகாரம் தந்தார்களா இல்லையா ? என்று பேசியவர் பேராசிரியர் அன்பழகன்.

பேராசிரியரின் இந்தப் பேச்சு இப்போதைக்கு இருக்கும் இந்தி வெறி பா.ஜ.க. அரசுக்கும் பொருந்தும். இந்தித் திணிப்பு என்பது நாட்டுக்குத் தீங்கானது என்பதை இந்த அரசு புரிந்து கொள்வது நல்லது. அதுவரை தி.மு.க.வின் இந்தி எதிர்ப்பு தொடரும்.

மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தியை திணித்து மீண்டும் மொழிப்போருக்கு நிர்பந்திக்கும் பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்து மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு FSO TN சார்பில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு முன்னிலையில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எம்.எம்.செந்தில் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் கண்டன உரை ஆற்றினார். உடன் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., ஜி.சந்திரபோஸ் குறிஞ்சி எஸ். கணேசன், வி.ராமநாதன், இரா.முருகேசன், டி.ஏ.ராஜ், சாந்தி பக்தன்,வி.ராமநாதன், டி.ஏ.ராஜ், இரா.முருகேசன்,சாந்தி பக்தன்,FSO மாணவர் கூட்டமைப்பு, இந்திய மாணவர் சங்கம் மாவட்ட தலைவர் அகல்யா, வடசென்னை காங்கிரஸ் மாவட்ட தலைவர் எம்.எஸ்.திரவியம், மனிதநேய மக்கள் கட்சி பைசல், மதிமுக சையது அலி, புழல் எம்.நாராயணன், ஜி.துக்காராம் உள்ளிட்ட ஏராளமானோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.